2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் மீனவர்கள் காணாமல் போனது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களும் நாகப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கோடிமாரி அவர்களும் மற்றும் திரு. ஆர். சிங்காரம் அவர்களும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் மீனவர்கள் காணாமல் போனது பற்றிய ஒரு பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இன்று அந்தப் பிரச்சினையை எழுப்பலாம் என்று நேற்றே நான் அவர்களுக்குத் தெரிவித்தேன். அந்த வகையில் இன்று அனுமதிக்கிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1993 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ம் நாள் அன்று கன்னியாகுமரி மாவட்டம் குரியாப்பட்டினம் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இதுவரைக்கும் ஊர்திரும்பாத காரணத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கொந்தளிப்பு அடைந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மறைந்த முதலமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1987-லே ஒரு அரசு ஆணையை வெளியிட்டார். அதிலே 5 மீனவர்கள் காணாமல் சென்றால் ஹெலிகாப்டரை வைத்துத் தேடலாம் என்று இருந்ததை மாற்றி ஒரு மீனவர் காணவில்லை என்றாலும் ஹெலிகாப்டரை வைத்துத் தேடவேண்டும் என்று சொல்லி—அன்றுகூட நான்தான் மிகவும் வலியுறுத்தி அந்தச் சட்டத்தைப் பெற்றோம் —— அரசு ஆணையைப் பெற்று இருந்தோம். ஆனால் இன்றைக்கு அங்கே 5 மீனவர்கள், நாகப்பட்டினம் பகுதியில் 15 மீனவர்கள் என்று இப்படி தொடர்ச்சியாக மீனவர்கள் காணாமல் போகக்கூடிய காலகட்டத்தில் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு தமிழ்நாட்டில் ஹெலிகாப்டர் இல்லை என்று சொல்கிற ஒரு சூழ்நிலை இருப்பதோடு மட்டுமல்லாமல் தேடிச் செல்லவேண்டிய படகுகளும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஏ.டி. அவர்களோடு தொடர்பு கொண்டு அந்த மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறபோது அவர்கள் புறப்படுகிற நேரத்தில் சொல்கிறார்கள், 'கடந்த ஓர் ஆண்டுக்காலமாக அந்தப் படகு பழுதடைந்து இருக்கிறது, எனவே அதை எடுத்துச் செல்ல முடியாது' என்று சொல்கிறார்கள். ஆபத்தான நேரத்திலே ஆபத்தை விளைவிக்கக்கூடிய தொழிலைச் செய்து கொண்டிருக்கக்கூடிய மீனவ நண்பர்களைக் கண்டுபிடிப்பதற்கு நிரந்தரமாக

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1993 மார்ச் 18

ஒரு பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்களை இலங்கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றார்களா, அல்லது விடுதலைப் புலிகள்தான் பிடித்துச் சென்றார்களா, என்னதான் செய்தார்கள், எங்கே இருக்கிறார்கள் என்று ஒன்றும் தெரியாத நிலைமை இருக்கிறது.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களை எமர்ஜென்சியாகத் தேடிச் செல்வதற்கு ஹெலிகாப்டர் ஒன்றை வாங்கி வைப்பீர்கள் என்று சொன்னால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அங்கே 4 பாயின்டுகள் இருக்கின்றன. தூத்துக்குடி பகுதி, ராமேஸ்வரம் பகுதி, கன்னியாகுமரி பகுதி போன்ற இப்படிப்பட்ட பகுதிகளில், ஆண்டு தோறும் தவறாமல் வருகிற புயலின் காரணமாக, அந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிற காரணத்தால், நிரந்தரமாக அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, ஹெலிகாப்டர் தளத்தை, கன்னியாகுமரி மாவட்டமானாலும் சரி, அல்லது நெல்லை மாவட்டமானாலும் சரி, ஏதாவது ஒரு இடத்தில் அமைத்துத் தருவீர்கள் என்று சொன்னால், அது அனைத்து மீனவ நண்பர்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும். சட்டத்தைப் போட்டும், ஹெலிகாப்டர் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை மாறி, ஹெலிகாப்டரைக் கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்ள முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ் அவர்களும் இது பற்றி என்னுடைய கவனத்திற்கு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அடுத்து திரு. ஆர். கோடிமாரி.

முற்பகல் 11-15.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23—2—1993 அன்று நாகூரைச் சேர்ந்த 12 மீனவர்கள் இரண்டு மீன்பிடி விசைப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்று, இதுநாள் வரையில் கரை திரும்பவில்லை. மேற்படி மீனவர்களின் மனைவிமார்களும், பிள்ளைகளும், நாகைப் பகுதி மீனவர்களும் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். மீனவர்களிடையிலே மிகுந்த கொந்தளிப்பான நிலை ஏற்பட்டுள்ளது. நாகை மாவட்டம் மற்றும் காரைக்கால் மாவட்டத்து மீனவர்கள் காணாமற் போன மீனவர்களை மீட்க கடந்த 8—3—1993 அன்று நாகை மாவட்டம் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் சுமார் 54 மீனவ கிராமங்களைச் சார்ந்த சுமார் 1 இலட்சம் மீனவர்கள் சாலை மறியல் மற்றும் ரயில் மறியல் போராட்டம் நடத்துவது என முடிவு செய்தனர். உடனடியாக நான் சம்பந்தப்பட்ட 54 கிராம மீனவப் பிரதிநிதிகளுடன்

சத்தியமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 18] [திரு. ஆர். கோடிமாரி]

பேச்சுவார்த்தை நடத்தினேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, என் தெய்வத்திடம் இந்த விவரத்தை தெரிவித்து, நல்ல செய்தியினை உங்களுக்கு இன்னும் 10 தினங்களில் தெரிவிக்கிறேன் என உறுதி கூறினேன். மீனவர்களும் எனது உறுதியினை ஏற்று, போராட்டத்தைக் கைவிட்டனர். இதற்கிடையில் செய்தித் தாள்களில் காணாமற் போன மீனவர்கள் இலங்கையில் இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அவர்கள் நமது தமிழகத்திற்கு வந்து சேரவில்லையே என்று கவலை அடைந்துள்ளனர்.

மேலும் மீனவர்கள் மட்டுமே உயிருடன் இருக்கிறார்கள் என்ற தகவல் வெளியாகி உள்ளதே தவிர, அவர்கள் சென்ற விசைப் படகு பற்றி எந்தவித தகவலும் இல்லை என்பதே செய்தியாக இருக்கின்றது. ஒவ்வொரு விசைப் படகின் விலையும் குறைந்தது ரூ. 4 இலட்சம் ஆகும். ஏழை மீனவர்கள் அந்த விசைப் படகை இழந்தால் அவர்களின் வாழ்வு இருண்டுவிடும். ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி, என் தெய்வம் இது சம்பந்தமாக காணாமற் போன மீனவர்களை கண்டுபிடிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மீனவ சமுதாய மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவியை தெய்வமாக மதிக்கின்றார்கள். அவர்கள் சென்ற விசைப் படகை மீட்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும் விசைப் படகை திரும்பப் பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விசைப் படகைக் கட்டிக் கொள்ள கடனுதவியும், மானியமும் வழங்கிட ஆவன செய்ய வேண்டி, என் தெய்வத்திடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த மீனவர்கள் காணாமற் போவது பற்றி அவர்களைத் தேடுவதற்கு ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்த போதிலும் அந்த ஹெலிகாப்டர்கள் தேடும் வாய்ப்பினை ஏற்படுத்த சில காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட வேளையில் அந்த மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு அந்த ஹெலிகாப்டரில் மீனவ சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை ஏற்றிச் சென்றால் அந்த மீன்பிடி படகு எங்கு இருக்கும் என்று அறிவதற்கு ஏதுவாக இருக்குமென்று சொல்லி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் வேண்டி, அமர்கிறேன். (குறுக்கீடு).

திரு. ஆர். சிங்காரம் : காங்கிரஸ் கட்சியினர் மீனவர்களைப் பற்றி கவலைப்படவில்லை என்பது போல் செய்தி வந்துவிடும். ஆகவே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் கொடுத்து இருக்கிறீர்கள். உங்களுடைய கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோடி மாரி அவர்கள் சொன்ன கோரிக்கையின் அடிப்படையிலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்ன கோரிக்கையின் அடிப்படையிலும், மீனவர்கள் இப்படி பல முறைகள் கடத்தப்பட்டும், காணாமற் போயும் இருக்கின்ற சூழ்நிலை நீண்ட பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியில்கூட இதே போல் மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு, அங்கே கொண்டுபோய் வைத்துக் கொண்டு, அதன் பிறகு இங்கே சட்டமன்றத்திலே நானும், எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பி. அவர்களும், குமரி அனந்தன் அவர்களும் பேசி, அதன் பிறகு அந்த மீனவர்களைக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அடுத்து இப்போது நாகப்பட்டினம் பகுதியில்கூட இதே நிலை ஏற்பட்டுள்ளதாக நான் கேள்விப்படுகிறேன். எனக்கு அடுத்த தொகுதிதான். காரைக்காலிலே இதே மாதிரி காணாமல் போய் விட்டார்கள். அந்த மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டினால் 7 பேர் இறந்து விட்டார்கள் என்றும் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இது குறித்து தமிழக அரசு மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் அறிவேன். ஆனால் அவர்கள் இன்னமும் வந்து சேரவில்லை. சேர்வதற்கான முயற்சியினை இன்னும் சற்று வேகமாக நடவடிக்கை எடுத்து, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆலோசனையோடு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகத் தீவிரமாக செயல்பட்டு, மீனவர்களை எப்படியும் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். மேலும் இனிமேல் இது போல் மீனவர்களை கடத்தாமல் இருப்பதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எனக்கு 16 ஊராட்சி மன்றங்கள் அந்த மீனவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் இருக்கின்றன. ஆகவே அந்த மீனவர்களோடு நான் அடிக்கடி தொடர்பு கொண்டிருக்கிறேன். அந்த மீனவர்களைப் பற்றி நானும், எங்களுடைய காங்கிரஸ் இயக்கமும் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே நீங்கள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-20.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே இன்றைக்கு தோன்றியது அல்ல. கடந்த 1983-லேயிருந்து இது போன்ற பிரச்சினைகள் அவ்வப்போது நடந்து கொண்டே தான் இருக்கிறது. அரசினுடைய கவனத்திற்கு எந்த ஒரு மீனவரும்

கடலிலே மீன் பிடிக்கச் செல்லும் போது காணாமல் போய்விட்ட தகவல் கிடைத்தவுடன் போர்க் கால அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது மட்டும் அல்லாமல் இதே மாமன்றத்திலே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, இந்த மாதிரி மீனவர்கள் பாதிக்கப்பட்டு அல்லல் படுகிறார்கள், அவர்களுடைய துயரத்தைப் போக்க அவர்களை பொருளாதார ரீதியிலே முன்னேற்ற வேண்டும் என்று .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு ஒன்றும் அல்ல, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இருக்கைக்கு நேரே ஒரு வண்டு அமர்ந்து இருந்ததை முதலமைச்சர் அவர்கள் பார்த்து அதை அடிப்பதற்காக காவலர் ஒருவரை அழைத்துச் சொன்னார்கள், அடித்துத் துரத்தியிருக்கிறார்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு எதிரே ஒரு வண்டு அமர்ந்து துன்பம் விளைவிக்கக் கூடிய அளவுக்கு இருந்து விடுமோ என்று அஞ்சி நமது முதல்வர் அவர்கள் காவலரை அழைத்து அதை அடித்துத் துரத்தியிருக்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எந்த ஒரு இடையூறும் ஏற்படக் கூடாது என்பதற்காக வண்டை அடித்துத் துரத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அந்த நல்ல எண்ணத்திற்கு நான் எப்போதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : இதே மாமன்றத்திலே நம்முடைய மீனவர்களைக் காக்கின்ற தெய்வமாகவிளங்குகின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் எந்த அல்லல் உற்றாலும் ஓடோடிச் சென்று அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுகிற ஒரு முதலமைச்சராக விளங்குகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உப்பூர் கிராமத்திலே அந்த மீனவர்கள் பொருளாதாரத்திலேயும் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்தோடு, ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, 7.5 கோடி செலவிலே இரால் வளர்ப்பதற்கு ஒரு உத்தரவை இட்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, மீனவர்களுக்காக பல்வேறு சலுகைகளையும் அளித்திருக்கிறார்கள்.

இங்கே பேசிய உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள். கடந்த காலத்திலே, ஒரு மீனவர் காணாமல் போய் விட்டால் கூட, ஹெலிகாப்டர் போய் தேடும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இந்த கரியாபட்டினம் சம்பவத்தைப் பொறுத்த மட்டிலே அரசுக்கு தகவல் கிடைத்தது 6 ஆம் தேதி. அன்றைக்கு உடனடியாக ஹெலிகாப்டர் மூலம் தேடி எங்கும் காண முடியவில்லை என்ற பதில்தான் வந்தது. அதே போன்று மறு நாளையும் ஹெலிகாப்டர் மூலம் தேடியிருக்கிறார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் அந்த வழியாக செல்லுகின்ற எல்லா கப்பல்களுக்கும் தகவல் கொடுத்து அந்த மீனவர்கள் பற்றிய விவரம் கிடைத்தால் உடனடியாக தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளோம். அது மட்டும் அல்லாமல் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி அவர்கள் இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டார்களா என்பதைக் குறித்து அறிந்து இங்கே தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த ரீதியிலே இன்றைக்கு விரைவான நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மீனவர்களை தேடுவதற்காக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் கூட இது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை செயலாளரை சந்தித்து பேசிய போது அவர்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக கூறிய போது அவர்களும் அரசுடைய நடவடிக்கைகளிலே திருப்தி அடைந்து விட்டதாக கூறி சென்று விட்டு மீண்டும் இங்கே வீணான வம்புக்கு இழுக்கிறார்கள். (குறுக்கீடு) இன்றைக்கு தமிழக மீனவர்களைக் காக்கின்ற தெய்வமாக இருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக பல சலுகைகளை அறிவிக்க உத்தரவு இட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன 12 மீனவர்கள் நாகூரைச் சேர்ந்தவர்கள் நேற்று இரவு திரும்பி விட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள். சுருக்கமாக முக்கியமான விஷயத்தை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். காணாமல் போன 12 மீனவர்கள் இலங்கையிலிருந்து திரும்பி விட்டார்கள். இன்று காலை அவர்கள் என்னை சந்தித்தார்கள். அவர்களுடைய மீன் பிடி சாதனங்களையும் படகுகளையும் இழந்து விட்டதாக அவர்கள் என்னிடம் முறையிட்டார்கள். அவர்களது மறு வாழ்விற்கு அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

முற்பகல் 11–25

அவர்களுக்கு உடனடி கைச் செலவுக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலா

2,000 ரூபாயை வழங்குமாறு ஆணையிட்டேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அது எங்கள் கட்சி அலுவலகத்தில் உடனடியாக வழங்கப்பட்டுவிட்டது. இந்த மீனவர்களில் 2 பேர் மட்டும்தான் சொந்த படகுகளின் உரிமையாளர்களாக இருந்தார்கள். மற்றவர்கள் அந்தப் படகுகளில் அவர்களுடன் பணி புரியும் மீனவர்களாக இருந்தார்கள். ஆழ் கடலில் மீன் பிடிக்கும் இத்தகைய பெரிய படகு வாங்க வேண்டுமென்றால் அதற்கு 3 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று அறிகிறேன். இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவென்றால் காணாமல் போன 12 பேரில் 2 பேர் மட்டும் தான் சொந்தப் படகுகளை வைத்திருந்தார்கள். மற்றவர்கள் அந்தப் படகுகளில் பணி புரியும் மீனவர்கள். ஆனால் இப்பொழுது நான் எப்படி உத்தரவிட்டிருக்கிறேன் என்று சொன்னால் இந்த 12 பேருக்கும் அரசு இலவசமாக புதிய படகை வழங்க வேண்டும். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) வலைகள், மீன்பிடிச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்க வேண்டும். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஒவ்வொருவரும் தங்களது சொந்தக் காலில் நின்று (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) தங்களது வாழ்வை நடத்திக் கொள்ளும் வசதிகளை அவர்களுக்குச் செய்து தர வேண்டும் என்று சொல்லி இந்த 12 பேருக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் செலவில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு புதிய படகுகளும், வலைகளும் மீன்பிடிச் சாதனங்களும் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் வெளியிடப்படும் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 110-ன் கீழ் வேண்டாம். இதற்குப் பதில் சொல்வதாக இருக்க வேண்டும். அதை அப்படியே சொல்லலாம். உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலாகவே சொல்லலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. கரியாப்பட்டினத்திலிருந்து காணாமல் போய்விட்ட மீனவர்கள் குடும்பத்திற்கு அந்த 5 மீனவர்களுக்கும் தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலா 10,000 ரூபாய் வழங்குவதற்கு உடனடியாக உத்தரவிட்டுள்ளார் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன என் தொகுதியைச் சார்ந்த நாகூரைச் சார்ந்த 12 மீனவர்களுக்கு வேண்டிய உடமைகள் மற்றும் பல நல்ல வாய்ப்புகளை தேடிக் கொடுத்த நமது மாண்புமிகு நான் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிக்கு என் தொகுதி சார்பிலும், மீனவர் சமுதாயத்தின் சார்பிலும் நன்றி சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியாப்பட்டினம் பகுதியில் காணாமல் சென்ற அந்த 5 மீனவர் குடும்பங்களுக்கும் தலா 10,000 ரூபாய் கொடுத்ததற்கு நான் எனது நன்றியைக் கூறிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இம்மாதிரி மாதம் 23 இன்ஸிடென்ட்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன. ஹெலிகாப்டர் ஒன்றை வாங்கியோ அல்லது ஹெலிபேட் ஒன்றை அந்தப் பகுதியில் அமைத்தோ அவர்களைத் தேடுவதற்கு வழிவகை செய்யப்படுமா ? காணாமல் போன மீனவர்கள் குடும்பத்திற்கு உதவி செய்ததற்கு நன்றி. அதே நேரத்தில் அவர்களை கண்டுபிடிக்க என்ன முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறீர்கள் ? அவர்களை துரிதமாக கண்டு பிடிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 பேரும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்று 28—2—1993 அன்று வரை இவர்கள் வீடு திரும்பாததால் நமது மீனவர்களைக் காக்கின்ற காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக கடலோர காவல் படையினர் மூலம் தேடுமாறு கேட்டுக் கொண்டார். இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்திற்கும் மத்திய அரசு மூலம், காணாமல் போன 12 மீனவர்கள் பற்றிய முழு விவரங்கள் தெரிவித்து தேடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு 3—3—1993 அன்று இந்திய தூதரகத்திலிருந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பதில் கிடைக்கப் பெற்றது. 9—3—1993 அன்று மத்திய அரசு அயல்நாட்டு விவகாரத் துறையிலிருந்து வந்த பேக்ஸ் செய்தியில் காணாமல் போன 12 மீனவர்களும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வசம் இருப்பதாகச் செய்தி வந்தது.

முற்பகல் 11–30

மேலும் விடுதலைப் புலிகள், 12 மீனவர்களையும் பன்னாட்டு செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைப்பதாகவும் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

1993 மார்ச் 18] [திரு. டி. ஜெயகுமார்]

10—3—1993 அன்று இந்திய தூதரகத்தின் முதன்மைச் செயலர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வவுனியாவுக்குச் சென்று 12 மீனவர்களையும் கண்டும் அவர்கள் நலமுடன் இருப்பதையும் உறுதிப் படுத்தினார்கள். 11—3—1993 அன்று அந்த 12 மீனவர்களும் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஐ.சி. 974 விமானத்தின் மூலம் 17—3—1993 அன்று சென்னைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். மீன் துறை அலுவலர்கள் மூலம் தன்னுடைய சொந்த ஊருக்கு அவர்கள் அழைத்துச் செல்லப் பட்டு இருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகள் எதிர்காலத் தில் எழாமல் இருப்பதற்காக வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு இன்னும் கூடுதலாக போது மான அளவுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி பாரதப் பிரதமருக்கு நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடிதம் ஒன்று எழுத உள்ளார்கள் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அவர்கள் வந்தார்கள். உதவி செய்தீர்கள், ஆனால் கரியாப்பட்டினம் பற்றி பதில் சொல்ல வில்லையே.......... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய விவ காரத்தைப் பற்றி முழுமையாகத் தகவல் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) கரியாப்பட்டினம் பற்றி தான் முதலில் அவர்கள் சொன் னார்கள். இரண்டாவது தான் நாகையைப் பற்றிச் சொன் னார்கள். மேலும் முதலில் உங்களுடைய 5 பேரைப் பற்றிய விவரத்தை தான் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) இப்போது நாகப்பட்டினத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியாப்பட்டினத்தினுடைய மீனவர் களை இன்னும் நாங்கள் விரைவாக, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக தேடிக் கண்டுபிடித்துத் தருவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று தமிழக அரசு, அதனுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 12 மீனவர்களை மீட்டு அவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதி வழங்கியதை, படகு வாங்கி தன் சொந் தக் காலில் நிற்பதற்கான தனி ஏற்பாட்டைச் செய்து கொடுத்த மீனவ நண்பன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர் களுடைய ஒரே வாரிசு (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் மனமார இதயமார பாராட்டுகிறேன். காரணம்

என்னுடைய 16 பஞ்சாயத்துக்களில் மீனவர்கள் இருக்கிறார்கள், ஆகவே மீனவர்களுடைய கஷ்டங்களை நான் உணர்ந்தவன் என்ற அடிப்படையில் தான் அதை நான் சொல்கிறேன். ஆகவே, கரியாப்பட்டினம் மீனவர்களையும் விரைந்து கண்டுபிடித்து அவர்களையும் காப்பாற்றவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) ஆசிரியர்கள் போராட்டம் குறித்தும் மதுரையில் உண்ணாவிரதம் இருந்த ஆசிரியர் இறந்தது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆசிரியர்கள் பல கோரிக்கைகளை வற்புறுத்திப் போராடி வருவதாகவும் போராட்டத்தின் ஒரு கட்டமாக உண்ணாவிரதம் இருந்த வேளையில் மதுரையில் ஒரு ஆசிரியர் இறந்தது பற்றியும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. சி. ஞானசேகரன், திரு. ... அரங்கநாதன், திருமதி ரமணி நல்ல தம்பி, திரு. எம். தெய்வநாயகம், திரு சே. செல்வராஜ், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கே. ஏ. மனோகரன், திரு. பெ. பொன்னுசாமி, திரு. எ. சம்பத், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எஸ். டேனியல்ராஜ், திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ஒரு பிரச்சினையை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பெருமக்கள் அவர்களுடைய எதிர்காலத்தை எண்ணி பல கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை மாநகரிலே பெரியார் பேருந்து நிலையம் முன்பாக உண்ணா நோன்பு மேற்கொண்டார்கள். அதிலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சுந்தரம் என்பவர் அங்கே உண்ணா நோன்பு இருந்து மயக்க நிலையை அடைந்தார். அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றவுடன் அவர் உயிர் பிரிந்து இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மறைந்த ஆரமபப் பள்ளி ஆசிரியர் தேனிக்கு பக்கத்தில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர். அவரை இழந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அத்தனை பேரும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் ஈடேறுவதற்கும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுவதற்கும் அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது பரிகாரம் காணவேண்டுமென்று உங்கள் வாயிலாக அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.